Registered as a NewsPaper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம்: 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  பங்குனி 29  (11 - 04 - 1992)  சனிக்கிழமை  ஓசை: 53

## கடந்த நான்கு மாதங்களில் 43 வீதி விபத்துக்கள்

### காவல்துறை தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு மாதங்களில் நாற்பத்திமூன்று வீதிவிபத்துக்களில் ஒன்பது பேர் பலியாகியுள்ளதுடன் நாற்பத்தொரு பேர் காயமடைந்துள்ளதாக தமிழீழக் காவல் துறையின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. கடந்த டிசம்பர் மாதம்முதல் மார்ச் மாதம்வரை நடைபெற்ற இவ்வீதி விபத்துக்களில் இருபத்திநான்கு துவிச்சக்கர வண்டிச்சாரதிகளும், ஒன்பது மோட்டார் சைக்கில் சாரதிகளும், மோட்டார் சைக்கில் பிரயாணிகள் நான்கு பேரும், மூன்று துவிச்சக்கர வண்டி பிரயாணிகளும், பாதசாரி ஒருவருமே காயமடைந்தவர்கள் ஆவர். மேற்படி விபத்துக்களில் 32 துவிச்சக்கரவண்டிகளும் 24 (4-ம் பக். பார்க்க)

# புலிகளின் இரு துணிகர தாக்குதல்கள்

# 20 இராணுவம் பலி: பலர் படுகாயம்

## கிழக்கில் ரோந்து அணிகள் சிதறடிப்பு

(திருமலை - மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு துணிகரத் தாக்குதல்களில் இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான இரு இராணுவ ரோந்து அணிகளும் சிதறடிக்கப்பட்டன. நேற்றுக் காலை இடம்பெற்ற இம் மோதல்களில் ஒன்று திருமலை மாவட்டம் மூதூரிலும், மற்றையது மட்டக்களப்பு மாவட்டம் புனானையிலும் இடம்பெற்றது.

புனானையில் இடம் பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

## மூதூர் அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் பலி

(திருமலை)

திருமலை மாவட்டம் மூதூரில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் பல ஆயுதங்களையும் இராணுவத்தினரிடம் கைப்பற்றியுள்ளனர்

நேற்றுக் காலை 7-30 மணி பாலத்திலுள்ள இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவ அணியினர் 67 ஆம் கட்டை என்னும் இடத்தில் வழிமடக்கித் தாக்கப்பட்டது

புலிகளின் வெற்றிகரமான இத் தாக்குதலினால் ரோந்து வந்த சுமார் 17 இராணுவத்தினரில் 14 பேர் கொல்லப்பட்டனர். ஏனைய மூவரும் தப்பி ஓடி விட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எது

டைபறிச்சான், பன்றிக்குடியிருப்பு ஆகிய முகாம்களில் இருந்து உதவிக்கு விரைந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இம் மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் சரியான தகவல் கிடைக்கவில்லை.

இதே வேளை இம் மோதல் இடம்பெற்ற போது உலங்குவானூர்தி மேற் கொண்ட தாககுதலில் பல பொது மக்கள் காயமடைந்தனர்.

## மூதூரில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மூதூர்)

மூதூர் 64 ஆம் கட்டை என்னும் இடத்தில் வைத்து

விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விப

## பலாலி எறிகணைக்கு புத்தூரில் மூவர் காயம்

(புத்தூர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புகள் மீது காலைவேளைமேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால்கைக் குழந்தை உட்படமூவர் காயமடைந்தனர் இரு வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8 மணியளவில் புத்தூர் கிழக்கு பகுதியை நோக்கி ஏவப்பட்ட 5இற்கு மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததினால் பொ. சுசிலா (வயது 30) இவரது பதினொருநாள் குழந்தை ஜீவதாசன் மற்றும் ச வசந்தி (வயது 15) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலினால் மூன்று வீடுகள் சேதமடைந்தன. (ச, க)

## மணலாறில் சிங்களக் குடியேற்றம்

## பிரேமதாசா தலைமையில் அபிவிருத்தி குழு நியமனம்

மணலாறு பகுதியில் குடியேற்றத்தை விரைவுபடுத்தும் நடவடிக்கையாக துரித அபிவிருத்தி வேலைகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் நேரடிக் கண்காணிப்பில் மேற்பார்வைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் குடி நீர் தட்டுப்பாடு போன்ற பல பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு ''வெலி ஓயா அபிவிருத்திக் குழு'' என்ற பெயரில் இக் குழு இயங்கும் என்று காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோறளை கூறியுள்ளார்.

## இந்தியா ஆட்சேபம்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் இலங்கையின் கடற்பகுதிக்குள் வழி தவறி நுழைந்த இந்திய மீனவர்கள் பதின்மூன்று பேரை இலங்கைக் கடற்படை கொன்றுவிட்டதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் விசைப்படகுகள் சுடப்படுவது தான் இதில் முக்கிய பிரச்சினையே அல்லாமல் அவை வழி தவறி இலங்கைக் கடற்பகுதிக்குள் புகுவது அல்ல என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத் ஜா தெரிவித்துள்ளார்.

## போராளிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சியாம்

(சென்னை)

தமிழ் நாடு விடுதலைப் படை என்ற பெயரில் இலங்கைத் தமிழ் போராளிகளுக்கு தமிழகத்தில் ஆயுதப் பயிற்சி அளிக்கப் பட்டு வருவதாக பொலிஸுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக சென்னைப் பொலிஸ் தரப்பில் சொல்லப் படுகிறது.

இது குறித்துப் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று சென்னைப் பொலிஸ் மா அதிபர் வால்டர் தேவாரம் தெரிவித்தார்.

# கொழும்பில்குண்டுவெடிப்பு

காப்பு வட்டாரங்கள் தெரி வித்தன.

இதேவேளை இத் தாக்குத லில் விடுதலைப் புலிகள் பல ஆயுதங்களையும் இராணுவத் தினரிடம் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுக் காலை 7-30 மணி யளவில் இத்தாக்குதல் நடை பெற்றுள்ளது. மூதூர் பெரிய

...

இத் தாக்குதலினால் ரோந்து வந்த சுமார் 17 இராணுவத் தினரில் 14 பேர் கொல்லப் பட்டனர். ஏனைய மூவரும் தப்பி ஓடி விட்டனர். விடு தலைப் புலிகள் தரப்பில் எது வித சேதமும் ஏற்படவில்லை.

இத் தாக்குதலின்போது கட்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மூதூர்)

மூதூர் 64 ஆம் கட்டை என்னும் இடத்தில் வைத்து ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது நேற்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ.கே.எல் எம் ஜி ரகத் துப்பாக்கிகள் - 2
ரம் மகசீன் - 10
லிங் - 180
★ ரி 56-2 ரகத் துப்பாக்கிகள் - 3
★ ரி 81 ரகத்துப்பாக்கி - 1
இதன் மகசீன் - 5
★ ரி 56 1 ரகத்துப்பாக்கி - 1
இதன் மகசீன் - 17
★ எஸ்.எல் ஆர் ரகத் துப்பாக்கிகள் - 6
இதன் மகசீன் - 11
கோல்சர் - 1
★ ஜே ஆர். ரக கைக்குண்டு - 5
★ சப்பாத்து - 7 சோடி
★ தலைக் கவசம் - 8
★ மில்ரி பெலிட் - 5
★ நடுத்தர ரவைகள் - 294
★ லிங்குடன் ரவைகள் - 700
★ நேற்ரோ ரவைகள் 131
★ கிற் பாக் - 2

# கொழும்பில்குண்டுவெடிப்பு 7 பேர் மரணம் பலர் காயம்

## கட்டடங்கள், வாகனங்கள் பலத்த சேதம்

(கொழும்பு)

மகரகம சந்திக்கு அண்மை யில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஏழுபேர் டலியாகினர். பலர் காயமடை ந்தனர். பல வாகனங்களும், கட்டடங்களும் பலத்த சேத மடைந்துள்ளதாக லங்காபுவத் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.45 மணியளவில் இடம் பெற்றது.

மகரகம சந்திக்கு அண்மை யில் உள்ள அரசமரத்தின்கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றிலேயே இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தாம் நம்புவ தாகச் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

காயமடைந்தவர்கள் கொழு ம்பு ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டனர். புது வருடத்தை முன்னிட்டு அப்பகுதி யில் சன நடமாட்டம் அதிக மாக இருந்ததாகவும், காயம் அடைந்தவர்களின் எண்ணி க்கை அதிகளவில் இருக்கலா மெனவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறிலங்கா எதிர்க்கட்சிகள்

# புனானையில் 6 படை பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் புனானையில் விடுதலைப் புலி கள் மேற்கொண்ட துணிகர அதிரடித் தாக்குதலில் ஆறு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர்காய மடைந்தனர். பல ஆயுதங்க ளைப் புலிகள் கைப்பற்றினர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது இராணு வம் முகாமிற்குள் ஓடியது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; நேற்றுக் காலை 8 30 மணியளவில் இடம்பெற் றது. சுமார் 20 பேர் கொண்ட இராணுவரோந்து அணியினர் இருபிரிவாக புனானை இரா ணுவ முகாமிலிருந்து தேக்கஞ் சோலை காவலரண் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போதே புலிகளின் அதிரடிக்கு உள்ளாகினர்.

புலிகளின் உக்கிர தாக்குத லினால் ஆறு இராணுவத்தி னர் ஸ்தலத்திலேயே கொல் லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்த தமது சகாக்க ளையும் தூக்கிக் கொண்டு முகாமிற்குள் ஓடி விட்டதாக வும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனானையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் விடு தலைப் புலிகளால் கைப்பற் றப்பட்ட நவீன ரக ஆயுதங் களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி -1
★ இதன் ரம் மகசீன் -04
★ லிங் -272
★ ரி-56 புதிய மொடல் துப்பாக்கி -05
★ இதன் மகசீன் -19
★ நடுத்தர ரவைகள் -532
★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் -07

★ ஏ.கே. கோல்சர் -05
★ சப்பாத்து -06 சோடி
★ கெல்மெட் -05
★ தொப்பி -01
★ மழைக்கோட் -01
★ மில்றி பெலிட் -02

## வீரச்சாவு

### சகாதேவன்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு புனானையில் சிறிலங்கா இராணுவத்தினரு டன் நேற்று ஏற்பட்ட நேரடி மோதலில் வீரவேங்கை சகா தேவன் (சிவலிங்கம் புவனேந் திரன் - அரசடித் தீவு மட்டக் களப்பு) வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரி வித்துக் கொள்கின்றனர்.

# அம்பாறை பஸ் நிலையத்தில் பாரியகுண்டுவெடிப்பு

## படையினர் உட்பட 25 பேர் பலி

(அம்பாறை)

அம்பாறையில் தனியார் பஸ் ஒன்றிலிருந்து சக்திவாய் ந்த குண்டொன்று வெடித் ததில் ஒரு பொலிஸ், ஒரு இராணுவ அதிகாரி உட்பட 25 பேர் பலியாகினர் 35 பேர் காயமடைந்தனர். இத் தகவலை சிறிலங்கா பாது காப்பு வட்டாரங்களை மேற் கோள்காட்டி செய்திகள் தெரி வித்தன.

நேற்று காலை 9 மணி யளவில் அம்பாறை பஸ் நிலையத்தில் தரித்துநின்ற பஸ் ஒன்றின் பெற்றோல் டாங்கியில் பொருத்தப்பட் டிருந்த குண்டொன்றே வெடி த்ததாக மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த பஸ் பொத்துவிலில் இருந்து அம்பாறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த 10 பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாகவும் அவர் கள் அம்பாறை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் மேலும் செய் திகள் தெரிவிக்கின்றன.

குண்டு வைக்கப்பட்டிருந்த பஸ்சிற்கு இருபுறமும் நிறுத் தப்பட்டிருந்த இரு பஸ்களும் முற்றாக சேதமடைந்தன கட்டிடங்களும் பல கடை களும் சேதமடைந்துள்ளன.

இக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் அநேகர் சிங்களவர்கள் என வும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# தியாகச் சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டவைப் பிரிவில் யாழ். பெருமாள் கோவிலடியில் இன்று தியாகச் சுடர் அன்னை பூபதி நினை வாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட் டமும் நடைபெறவுள்ளன.

அடையாள உண்ணாவிரதம் காலை 8-00மணி முதல் பிற் பகல் 4-00 மணி வரை இடம் பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7-00 மணிக்கு ஆரம் பமாகும். இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலையரசன். அன்பரசன், செல்வன் ஆகி யோர் கலந்து கொண்டு உரை யாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கலை நிகழ்ச் சிகளில் சின்னமணி குழுவின ரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

## 'அத்த' பத்திரிகைமீது அரசு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு அவமதிப் பும், அபகீர்த்தியும் ஏற்படுத் தும் விதமாக செய்தி வெளி யிட்டமைக்காக உடுகம்பொல மீதும், 'அத்த' பத்திரிகை மீதும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது, சட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திற்கு எதிராக அடுத்த பாதயாத்திரை

(கொழும்பு)

அரசுக்கெதிரான அடுத்த பாதயாத்திரை கொழும்பிலி ருந்து கண்டிவரை நடை பெறும் என்று தெரிவிக்கப் படுகிறது.

பாதயாத்திரைக் குழு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவுடன் இரண்டாவது பாதயாத்திரை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாக எதிர்க்கட்சி தரப்பில் சொல்லப்படுகிறது.

பாதயாத்திரையை மிக விரைவில் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எப்போது நடத்துவ தென்று திகதி நிர்ணயிக்கப் படவில்லை.

'பஞ்ச பலவேக' என்றழைக் கப்படும் நடுத்தர அரசஊழியர் முதல் மகாசங்கம் வரை பங்கு கொள்ளும் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகள் தீர் மானித்திருப்பதாக அதே வட் டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய யு. என். பி. அரச நிர்வாகத்துக்கு எதிரா கவே இப் பொதுக் கூட்டம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு - இரத்தினபுரி - முன்னேஸ்வரத்தை இணைத்து 'மனிதச் சங்கிலி' ஒன்றை நடைமுறைப்படுத்துவது பற்றி யும் ஆலோசிக்கப்பட்டது.

## சங்கிலி அறுத்த லான்ஸ் கோப்ரல் கைது

(தெரணியகலை)

பொரலங்கட தோட்டப் பாதையில் வந்து கொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய சிறிலங்கா ராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவரையும் அவருக்கு உதவியாக இருந்த வேறொருவரையும் தெரணியகலை பொலிசார் கைது செய்துள்ளனர்.

தங்கச் சங்கிலியை பறிகொடுத்த ஆசிரியை கொடுத்த ஆள் அடையாளத்தை அடுத்து சம்பந்தப்பட்டவர் கும்புருகமுவ என்ற கிராம வாசியாக இருக்கலாமென ஊகித்த பொலிசார் சம்பந்தப்பட்ட இராணுவ வீரரைக் கைது செய்து அவரது வீட்டை சோதனை செய்தபோது பறிக்கப்பட்ட சங்கிலி ஒரு மண்ணெண்ணை போத்தலொன்றினுள் இருந்து மீட்கப்பட்டது இராணுவவீரர் கொடுத்த தகவலையடுத்து அவரது நண்பரும் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிய பாடசாலை அபிவிருத்தி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிறிய பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கருத்தரங்கு இன்றும் 12 ஆம், 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

100 பேருக்குகுறைந்தமாணவர் கொண்ட பாடசாலைகளின் அபிவிருத்தி பற்றி இங்கு ஆராயப்படும். இவ்வாறு அபிவிருத்தி அடைய வேண்டிய பிரதேசங்களில் உள்ள சிறிய பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் ஆர்வமுடையவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

[பா]

### தவறிவிட்டது

28-03-92 அன்றும் புருவிலிக்கும், பல்லவராயன் கட்டுக்குமிடையில் பயணப்பொதி (ரவலிங் பாக்) தவறிவிட்டது. இப் பொதியினுள் உடுபுடவைகளும், திருமதி மேரி மெற்றலின் அருளப்பு, பேசாலை என்ற முகவரியுடைய ஆள் அடையாள அட்டையும், அவருடைய கொழும்பிலிருந்து வரும் போது வழங்கப்படும்அனு


**Bata பாட்டா**

வடபகுதி மக்களின் நலன்கருதி
தற்பொழுது
வவுனியா நகரில்
மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது
புத்தாண்டை முன்னிட்டு 14% முதல் 25% வரை கழிவு உண்டு
பாட்டா மொத்த விற்பனை நிலையம்
இல. 35, மில்றோட், வவுனியா.
(2402)



**A/L - 93, 94**
**கலை வர்த்தகம்**

புதிய பிரிவுகள் 16 - 04 - 92 இல்

யாழ்நகரில் முன்னணி ஆசிரியர்களால்
15 வருட கல்விப்பணியின் அடிப்படையில்

- பொருளியல் - திரு. மகேந்திரன்
- கணக்கியல் - திரு. அகஸ்ரின்
- வர்த்தகவியல் - திரு. பசில்
- அளவையியல் - திரு. யுகபாலசிங்கம்
- கிறிஸ்தவம் - செல்வி அன்ரனற்பிலிப்
- அரசியல் - திரு. கியூபேட் ராஜன்
- ஏனைய பிரதான பாடங்களும் உண்டு

O/L - 92 புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

ஆர். ஜே. கல்வி நிலையம்
29/1, கடற்கரைவீதி, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (2438)



யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கம்

**பிரதேச மன்றங்களின் பொதுக் கூட்டங்கள்**

கோரமின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட மேற்படி பொதுக்கூட்டங்கள் 1992.05.02 ந் திகதி கீழே தரப்பட்டுள்ள நேர அட்டவணைப்படி சங்க மண்டபத்தில் நடைபெறும்.

| பிரதேச மன்றம் | நேரம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | பி.ப. 2.00 |


## சந்தோசமாக இருப்பதாக கூறிவிட முடியாது

### - ஊர்காவற்றுறை தபாலதிபர்

(கொழும்பு)

''நாம் தீவுப் பகுதியில் சந்தோஷமாக இருக்கிறோமா என்பது குறித்த கேள்விக்கு விடையளிப்பதுகஷ்டமானது'' என்று ஊர்காவற்றுறையில் தபால் அதிபராக கடமை புரியும் எஸ். நல்லைநாதன் 'வீரகேசரி' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் பேசும் போது 'எனது தொழிலில் தலையீடுகள் இருக்கின்றன. கடிதங்கள் உடைத்துப் பார்த்தே என்னிடம் ஒப்படைக்கப்படுகிறது. சிறிலங்கா கடற்படையினர் கொழும்பிலிருந்து கொண்டு வரும் கடிதங்களை ஈ.பி.டி.பி.யினர் பெற்று என்னிடம் ஒப்படைக்கின்றனர். இது குறித்து நான் அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளேன்'' என்று தெரிவித்தார்.

இது குறித்து வீரகேசரி நிருபர் கேணல் முனசிங்காவிடம் கேட்ட போது அவர் ''இப்போது தான் இதுபற்றி கேள்விப் படுகிறேன் விசாரணை நடத்துவேன்'' என்று தெரிவித்தார்.

## பென்சன் வவுச்சர் வந்தது

ஏப்ரல் மாதத்திற்கான பென்ஷன்வவுச்சர்களை யாழ் அரச அதிபர் தம்முடன் எடுத்து வந்துள்ளார். இவ் வவுச்சர்கள் மிக விரைவில் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (பா)


**அம்பாள் அரிசி ஆலை**

அல்வாய் மேற்கு திக்கம்

எம்மிடம் சகல விதமான அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் மிளகாய், பயறு, உழுந்து, குரக்கன் யாவும் குறைந்த கட்டணத்தில் அரைத்துக் கொடுக்கப்படும்.

1 Kg மிளகாய் அரைக்க 25ரூபா மட்டுமே. மாவகைகள் யாவற்றுக்கும் 8 ரூபா மட்டுமே.
(2442)



**ஸ்ரீதர் திரையரங்கில்**

தினசரி மாலை 4 00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

**Eagles Over London**

(லண்டன் மேலாக கழுகுகள்) (சி/4144)


அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு 1971-10-10 வீரச்சாவு 1992-03-12

**ஆண்டான்**

**குமாரசாமி விஜய மனோகரன் (இந்தி)**

ஆண்டான் அடிமை இல்லை என்றாய்
ஆர்வம்கொண்டு புலிப்படை தனிலே சேர்ந்தாய்
ஆர்ப்பரித்துப் போரிடுவோம்
இலங்கையது அவன் நாடு
ஈழமது எம் நாடு என்றுரைத்த நீ இன்று
எமைப்பிரிந்து சென்றாய் ஏன்
உன்பிரிவால் வாடுகின்றோம்
உனை நினைத்து ஏங்குகின்றோம்.

ஆலங்கேணி, பூநகரி. (2447)

குடும்பத்தினர். நண்பர்கள்

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 11

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ். மாவட்டத்தில் பரவலாக சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 40 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு குறிஞ்சாத்தீவில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ரஞ்சித்** (வன்னியசிங்கம் பாஸ்க்கரன்-இத்தாவில், பளை)

**கர்ணன்** (புண்ணியர் சிவராசா-சின்னத்தாளையடி)

1988 ஆம் ஆண்டு பாண்டியன் குளத்தில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். ரவி** (குலசேகரம் செல்வநாயகம்-

போது வழங்கப்படும்அனு
மதி (சிவப்பு) அட்டை,
அத்துடன் இராமலிங்கம்
கணேசதாசன் (புத்து
வெட்டுவான், கிளிநொ
ச்சி) என்பவருடைய
சாரதி அனுமதிப்பத்தி
ரம் ஆகியவை அடங்கும்.
இதுபற்றிய விபரம்
அறிந்தவர்கள் அல்லது
கண்டெடுத்தவர்கள்
தயவுசெய்து ஈழநாதம்
பத்திரிகைக் காரியாலயத்
தில் அல்லது M.R.S
போக்குவரத்துச் சேவை,
பஸ்நிலையம்,கிளிநொச்சி
யில் ஒப்படைக்கவும்.
தகுந்த சன்மானம் வழங்
கப்படும்.

(சி/4145)

---

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | பி.ப. 2.00 |
| நல்லூர் | பி.ப 2.45 |
| கோப்பாய் | பி.ப 3.30 |

**நிகழ்ச்சி நிரல்**

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. பிரதேச மன்றக் குழு உறுப்பினர்கள் ஒன்பது பேரைத் தெரிவு செய்தல்
4. நன்றியுரை

அங்கத்தவர்கள் அனைவரும் தயவு செய்து தவறாது வருகை தரவும்

தலைவர்

(சி/4148) (09-04-92)

---

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை

## தேவை

**முகவர்கள்:**

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் முகவர்கள் தேவை. 20 - 50 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி ஆகியவற்றுடன் 25-04-92 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்

(சி/4142)

---

**லெப். ரவி** (குலசேகரம் செல்வநாயகம்- முள்ளிவாய்க்கால்)

ஒட்டங்குளத்தில் -இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுனில்** (கதிரவன் -தமிழகம்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட காட்டு முறிவைச் சேர்ந்த தமிழ் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/4147)

---

# அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1957 **வட்டுக்கோட்டை** பதிவு இலக்கம் S. 154

அங்கத்தவர் வங்கியான எங்கள் வளமிகு சங்கத்தின் பாசமிகு புத்தாண்டு வாழ்த்துக்கள் 8000 அங்கத்தவர்களுக்கும் உரித்தாகுக!

❋ தமிழீழத்தின் தனித்துவமான மக்கள் ஸ்தாபனம் ❋ பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளை பலகாலும் வழங்குவது

அங்கத்தவர்களின் விடிவிற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் உன்னத சங்கம்

❋ பூப்படைதல், விவாகம், முதிர்ச்சி, சகாய, நன்கொடை, அந்தியகாலம்

❋ கைமாற்றுக்கடன், குறுகியகாலக்கடன், நீண்டகாலக்கடன், உயர்கல்விக்கடன், உண்டியல் மாற்றம், அடகு

❋ சேமிப்பு நிலையான வைப்பு, 5 வருட நன்கொடை வைப்பு

மாதவட்டி 16% வருட வட்டி 18%

பிரவேசம் 120-00 பங்குப்பணம் 25-00 மாதாந்தம் 20-00

செ. இ. ஆனந்தராசா
பொது முகாமையாளர்

கே. எஸ். அருளானந்தர்
தலைவர்

மேலதிக விபரங்கட்கு:

பொதுமுகாமையாளர்
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்
தபாற்கந்தோரடி - வட்டுக்கோட்டை

**பிறிதோர் நற்செய்தி**

**அங்கத்தவர் நலன் கருதி**

சங்கானை நகரில் எமது பணம் வசூலிக்கும் நிலையம் குளத்தடியில் அமைந்துள்ள வர்த்தகர் சங்கப் பணிமனையில் சனி ஞாயிறு வாரங்களில் மாத்திரம் நாள் முழுவதும் செயற்படும்.
ஆரம்பம்: 23-04-92 வியாழக்கிழமை காலை 8.30 மணி.
நிலையம் தலைவர் அவர்களால் திறந்துவைக்கப்படும்.
பொறுப்பாளர்:- முகவர் செல்வி. தெ. கௌசலா

★அங்கத்தவர்கள் அன்பர்கள் அழைக்கப்படுகின்றனர்★



(சி/4141)

## சிந்தனைக்கு

நாம் எதிர்பாராத இடங்களில்தான் மிகப்பெரிய சிரமங்கள் தோன்றுகின்றன.

-யொஹன்கேத்தெ-


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 11-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 05


## மீண்டும் நெருக்கடியில் பிரேமா அரசாங்கம்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அரசாங்கத்திற்கு மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடி உருவாகியுள்ளது. கடந்த வருடம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாச மீது பாராளுமன்றத்தில குற்றவிசாரணை கோரும் பிரேரணை கொண்டுவரபபட்ட போது எழுந்த அரசியல் நெருக்கடிக்கு அடுத்து எழுந்துள்ள நெருக்கடி இதுவாகும். கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எவையும் அடுத்தடுத்து இவ்வாறான நெருக்கடிகளைச் சந்திக்கவில்லை என்பதோடு இவ்வாறான தன்மை கொண்ட நெருக்கடிகளையும் சந்திக்கவில்லை என்றும் கூறலாம்.

தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினையிலும் வழமை போல்எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பதவி விலகக் கோரியதோடு பொதுத தேர்தலையும் உடன் நடத்தக் கோரிக்கையும் விடுத்துள்ளன. இதன் மூலம்கட்டாயலீவில்இருப்பவரும்தலைமறைவாக இருப்பவருமான பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம் பொல எதிர்பார்த்த இலக்கை அடைந்துள்ளார் என்றே கூறலாம்.

சில தினங்களுக்கு முன்னர் இதே பகுதியில் திரு. உடுகம்பொல விடுத்துள்ள அறிக்கை தனது விவகாரத்தை அரசியல் மயப்படுத்தவும், அதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சம்பந்தப்படுத்தவும் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தோம் தற்போதைய தென்னிலங்கை நிகழ்வுகள் அதனை தெளிவாக வெளிக்காட்டுபவையாகவும் உள்ளன.

கடந்த வருடம் சிறிலங்கா ஜனாதிபதி மீது குற்றவியல் விசாரணை கோரும் மனு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக இருந்தது அத்தோடு, குற்றச் சாட்டுகள் எவையும் ஆதார பூர்வமாக இருக்கவில்லை. மேலும், குற்றச் சாட்டுகள் தராதரமற்றவையாகவும் இருந்தன. ஆனால் தற்பொழுது திரு. உடுகம்பொல வைத்துள்ள குற்றச் சாட்டுகள் பற்றி எந்தளவிற்கு ஆதாரங்கள் இருக்கும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்ற போதும் சில கொலைகள் தொடர்பாக உடுகம்பொல வெளியிட்டுள்ள படங்கள் ஆதாரங்கள் சில அவரின் கையில் இருக்கலாம் என்பதைக் காட்டுவதாகவுள்ளது

திரு உடுகம்பொல சர்ச்சைக்குரிய, அதேவேளை திறமைமிக்க குற்றவியல் தடுப்புப் பொலிஸ் அதிகாரியாகும். இந்நிலையில் திரு. பிரேமதாசாவின் மிக நெருங்கிய நம்பிக்கைக்குரிய சகாவாகக் கடந்த காலத்தில்

# அமைய எழுது வினைஞர்கள் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் அமைய எழுது வினைஞர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளிவந்தன.

யாழ். மாவட்டத்தில் மேற்படி பதவிக்காக முந்நூற்று நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் புள்ளி அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு தேவையான இடங்களில் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப் படுகிறது. பரீட்சை முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| 3026 | ரி. சேந்தன் |
| 2852 | எஸ். ராகுலன் |
| 3051 | எஸ் ஜீவராசா |
| 1868 | எம், கணேஸ் |
| 1070 | பி. பவானி |
| 1675 | எஸ். தயாளினி |
| 1894 | எஸ். விசாலாட்சிதேவி |
| 2295 | எஸ் நல்லதம்பி |
| 2432 | ஜி மேரி யமுனா |
| 1220 | கே. சிவகுமாரன் |
| 2021 | என் கிதரன் |
| 2704 | ஜே பி. அரசகுமார் |
| 2284 | ரி திருவருட்செல்வன் |
| 2566 | எஸ். சிவசக்தி |
| 1569 | எஸ்.எஸ் சரவானந்தன் |
| 1676 | எஸ் சிவகௌரி |
| 1936 | எஸ் விச்ரசியாநவாயின் |
| 2528 | கே. சந்திரிகா |
| 2750 | எஸ். சிவபாதசேகரம் |
| 2563 | ரி. வசந்தன் |
| 2577 | எஸ் அன்பரசி |
| 2982 | ஜி. அருள்நிதி |
| 3794 | எஸ். திவாகரன் |
| 2193 | என். விமலானந்தன் |
| 1087 | வி அனவரதன் |
| 1499 | எஸ். வத்சலாதேவி |
| 1758 | எஸ். நந்தினிதேவி |
| 1158 | என் கயல்விழி |
| 1262 | என். அஞ்சலிதேவி |
| 1763 | எஸ். அருள்மாலா |
| 3036 | எஸ் சாரதா |
| 3694 | கே. அருந்ததி |
| 4008 | எஸ் இரட்ணசிங்கம் |
| 4127 | எஸ். சுமதி |
| 1609 | கே. சந்திரிகா |
| 1448 | ரி சுபாகரன் |
| 1705 | ஜி அருள்மொழி |
| 1942 | ஈ. சுதர்சினி |
| 1950 | எஸ். சற்குணராசா |
| 2999 | எஸ். சாந்தி |
| 3512 | எஸ் தர்பலிங்கம் |
| 3566 | எம். மைதிலி |
| 3679 | என் நிறைஞ்சினி |
| 3982 | ரி சுசந்திரா |
| 1485 | ஆர். வானதி |
| 2560 | பி வாசுகி |
| 2584 | சே. சுகந்தி |
| 3459 | கே ரட்ணராசா |
| 3537 | எஸ். முத்தையா |
| 3558 | வி சௌந்தரராஜன் |
| 3726 | ஜி. யாழினி |
| 4031 | என். எஸ். ஆர் வேதநாயகம் |
| 1099 | கே வானதி |
| 1463 | என் யூஜான் மேரி இமல்டா |
| 1767 | ஆர். லலிதா |
| 1830 | எஸ் உதயகுமார் |
| 2332 | எஸ் ஜெயந்தினி |
| 3528 | கே. சாந்தகுமாரி |
| 3867 | எம். ஈ செடஸ் ஐயம்பிள்ளை |
| 1074 | கே. இந்திரகுமார் |
| 1082 | ரி. சுகந்தி |
| 1253 | வை. ராதிகா |
| 2242 | கே. பிரேமதாஸ |
| 2481 | ரி கிரிஜா |
| 2578 | எஸ் எழிலரசி |
| 3090 | பி மஞ்சுளா |
| 3223 | எஸ். தனேஸ்வரன் |
| 3520 | எம். சந்தசாமி |
| 3851 | பி நடராஜா |
| 1288 | வி. ரவீந்திரன் |
| 2015 | எஸ் சிவசுந்தரம் |

| | |
|---|---|
| 2768 | எஸ். பவானி |
| 2988 | வி. பாலசுந்தரம் |
| 3651 | வி இந்துமதி |
| 3949 | வி. மகாலிங்கம் |
| 1217 | என். தயாழினி |
| 1713 | பி. தேவிகாராணி |
| 1725 | ரி. செல்வமனோகரி |
| 1815 | பி. விமலதாசன் |
| 1914 | ஜ ரத்னேஸ்வரி |
| 2377 | ஜி நடராஜா |
| 2995 | எஸ் வாசுகி |
| 3147 | கே. சிவகௌரி |
| 3430 | பி ஸ்ரீபாலன் |
| 3529 | எஸ், வேலாயுதம் |
| 1170 | ஏ யூசைதாஸ் |
| 1289 | ஏ. ஜெனவி ஜீவரதிமதி |
| 1537 | கே தேதீஸ்வரி |
| 1560 | ஜி துஷ்யந்தி |
| 2088 | ரி சுதஜினி |
| 2140 | எம். சிதம்பரநாதன் |
| 2473 | எஸ். ஆனந்தி |
| 2967 | கே மதியழகன் |
| 3385 | வி. பாலசுப்பிரமணியம் |
| 3481 | எஸ் நந்தகுமார் |
| 3658 | கே. விஜயசிறி |
| 3958 | என். சுநதையா |
| 3970 | ரி அம்பிகைபாகன் |
| 1186 | கே, சுப்பிரமணியம் |
| 1221 | எம். நிரஞ்சன் |
| 1835 | எம். ஏ. ஜேசுதாஸ் |
| 1947 | எம். சுதாகர் |
| 1968 | கே. சுதர்மினி |
| 2737 | எஸ். ஸ்ரீபதி |
| 2996 | எஸ் ஸ்ரீதேவி |
| 3344 | பி பரணிதரன் |
| 3559 | வி. பொன்னையா |
| 4022 | எஸ் சிவகுமார் |
| 1050 | கே. அற்புதராணி |
| 1154 | ஆர். ஸ்ரீரஞ்சினி |
| 1473 | எஸ் இந்திராணி |
| 1714 | எஸ். சசிகலா |
| 1957 | பி. ஜலின் அனஸரா |
| 2073 | கே ஜெயபாரதி |
| 2087 | ஆர். சுபாஷினி |
| 2132 | ரி உமாராணி |
| 2212 | ரி. சிவராஜ் |
| 2232 | எஸ். உதயகுமாரி |
| 2404 | எஸ். பிரசாத் |
| 2561 | எஸ் பி வாகீசன் |
| 2831 | எஸ். சிவகெங்கா |
| 2989 | பி. கோகுலஸ்ரீ |
| 3046 | எஸ் மாதங்கி |
| 3123 | எம். மலரன்னம் |
| 3531 | ஆர். கருணாநிதி |

| | |
|---|---|
| 3548 | என். புஷ்பகலா குருக்கள் |
| 3661 | எஸ். வாசுகி |
| 4087 | கே. விமலாம்பிகை |
| 1147 | ரி. ரட்ணம் |
| 1162 | ரி. ராதாஜெயலக்ஷ்மி |
| 1188 | ரி. ஜெயந்தி |
| 1233 | எஸ். சாந்தகுமார் |
| 1461 | பி. குமாரலிங்கம் |
| 1720 | கே. வசீகரன் |
| 3184 | கே. சித்திரா |
| 3199 | எஸ். கமலாநிதி |
| 3357 | எம். கந்தஞானி |
| 3464 | எஸ் சுதாகரன் |
| 3601 | எம். ரஞ்சினி |
| 3741 | பி. பவாநந்தி |
| 3936 | எஸ் சிவராசா |
| 1715 | எஸ். அருள்நேசன் |
| 1752 | எஸ். தாட்சாயனி |
| 2071 | எஸ். ஜெயந்தி |
| 2101 | ஏ. சண்முகநாதன் |
| 2125 | எஸ். பத்மினி |
| 2310 | என். வீரபாண்டிய ராஜன் |
| 2363 | எஸ். சுந்தரமூர்த்தி |
| 2490 | கே. இளங்கீரன் |
| 2491 | கே கோமதி |
| 2546 | எஸ். ரஞ்சினி |
| 3274 | பி. என். முத்துக்குமார் |
| 3418 | டி. செல்லத்துரை |
| 3494 | பி பிரபாகர் |
| 4107 | என். சேகர் |
| 1449 | எஸ் புஸ்பதேவி |
| 1524 | ஏ. சாந்திகா |
| 1593 | எஸ். சுமதி |
| 1769 | ஐ சிவானேந்திரன் |
| 2009 | கே. தயானந்தன் |
| 2478 | வி. உமாமகள் |
| 2658 | ஜே. சிவரட்ணம் |
| 3403 | ஆர். துரைரட்ணம் |
| 3493 | பி. சண்முகநாதன் |
| 1071 | கே. சாந்தகுமார் |
| 1077 | ஆர். கற்பகதேவி |
| 1175 | பி மோகானாம்பாள் |
| 1340 | ஏ. மிருநாளினி |
| 1442 | எஸ் சுகந்தினி |
| 1740 | கே. கலாவதி |
| 1829 | எஸ். சிவலோஜனி |
| 1842 | ஏ. என். விஜயரட்ணம் |
| 1875 | ரி. ராஜினி |
| 2001 | கே. எச். ஸ்ரீவன் |
| 2156 | வி. பிரகலாதன் |
| 3025 | ரி. முனோகோகுலா |
| 3483 | பி. சிவபாலினி |
| 3524 | ஆர். நாகேஸ்வரா |

| | |
|---|---|
| 3647 | ஆர். லோகேந்திரா |
| 3915 | யூ. நாகரட்ணம் |
| 1152 | எஸ். மனோகரா |
| 1249 | ரி. மகேஸ்வரன் |
| 1492 | எஸ். இந்திரவனிதா |
| 2102 | எஸ். சபாரட்ணம் |
| 2289 | என். கமலவதனி |
| 2328 | எஸ். செல்வராஜா |
| 2412 | எம். ஈ. சூசைதாசன் |
| 2601 | என். ரவீந்திரன் |
| 3308 | எஸ். பாலச்சந்திரன் |
| 3552 | என். திருநாவுக்கரசு |
| 3668 | பி. சுஜீவா |
| 3708 | கே. வைதேகி |
| 1124 | கே. கமலேஸ்வரி |
| 1173 | ஏ. சந்திரமாதேவி |
| 1382 | பி. வாசுகி |
| 1570 | கே. கிருஷ்ணகுமாரி |
| 1657 | கே. மதிவதனி |
| 1977 | எஸ், அன்னலிங்கம் |
| 2188 | கே. ஜெயகுமார் |
| 2291 | எஸ், சடகோபன் |
| 2846 | எம் தவபாலன் |
| 2933 | எஸ மாதினி |
| 3183 | கே. சுமித்திரா |
| 3404 | கே. செல்வமணி |
| 3542 | ஆர் சிவனேஸ்வரன் |
| 3591 | கே. காந்தரூபி |
| 4044 | வி. எம் அல்பிரட் |
| 1055 | ஜி. காந்திமதி |
| 1232 | ரி. புஷ்பராணி |
| 1310 | ஆர். சுவர்ணன் |
| 1345 | கே. தமிழ்ச்செல்வி |
| 1531 | ரி. திருஞானந்ததேவன் |
| 1538 | எஸ். பவானி |
| 1677 | ஆர் மகேஸ்வரி |
| 1681 | எஸ், யாழினி |
| 1682 | ரி. சுதாகரன் |
| 1747 | ஜி. சியாமளா |
| 1890 | ரி. முகுந்தன் |
| 1999 | ஐ. மரியதாசன் |
| 2099 | கே. நந்தகுமார் |
| 2183 | என், புனிதாம்பிகை |
| 2216 | கே. ரஞ்சிதமலர் |
| 2281 | ஆர். உமாசங்கர் |
| 2362 | ரி அருளானந்தம் |
| 2451 | ஆர். ஜெயந்திமாலா |
| 2777 | எவ். எம். ஐ. ஜேம்ஸ் |
| 2785 | ஆர். கந்தசாமி |
| 2792 | கே. சித்திராதேவி |
| 2966 | கே. புனிதவித்தகன் |
| 3021 | ரி தேவரஞ்சினி |
| 3627 | ஆர். வானதி |

| | |
|---|---|
| 3854 | ரி முருகதாஸ் |
| 1019 | என். பாஸ்கரன் |
| 1143 | கே. ராஜ்குமார் |
| 1145 | கே. ரவிகுமார் |
| 1236 | எஸ். ஜெனற்ஜெயந்தினி |
| 1428 | ஏ. சிவஞானசக்தி |
| 1522 | ஏ. ஜெகதீஸ்வரன் |
| 1590 | எஸ். ஜே. சுரேந்திரா |
| 1605 | எஸ். யசோதரா |
| 1779 | என். சத்தியா |
| 1792 | என். கதிரவேலு |
| 2032 | ஈ. கே. விஜேசன் |
| 2165 | ரி தர்மலிங்கம் |
| 2262 | எஸ். நாகலிங்கம் |
| 2293 | யூ. தவராஜா |
| 2298 | ரி. சிவானந்தன் |
| 2548 | கே. சத்தியராணி |
| 2555 | வி. சுமதி |
| 3030 | என் மங்கையற்செல்வம் |
| 3131 | ரி. மஞ்சுளா |
| 3228 | கே. விஜயரட்ணம் |
| 3583 | எஸ். செல்வானந்தி |
| 3657 | பி. மீரா |
| 1193 | எஸ் சித்திரா |
| 1639 | பி. அனுஷா |
| 1694 | ரி. அமிர்தா |
| 1937 | எஸ் திலகவதி |
| 2092 | வி. யாதவராஜன் |
| 2127 | ஏ. அருளானந்தம் |
| 2276 | என். பத்மநாதன் |
| 2322 | எம். கங்கேஸ்வரி |
| 3873 | ஏ. உமாசங்கர் |
| 3976 | ஏ. பரமேஸ்வரி |
| 1239 | ஆர். ராஜமோநந்தினி |
| 1292 | பி. ஸ்ரீஸ்கந்தராஜா |
| 1398 | கே. சுவர்ணதேவி |
| 1585 | ஏ. பத்மதாசன் |
| 1761 | என். கணேசசேகரன் |
| 1953 | ஆர். சாந்தினி |
| 1979 | ஐ கமலாம்பிகை |
| 2069 | எஸ், தவனேஸ்வரன் |
| 2233 | ஜி. மரியராஜன் |
| 2273 | ஜி சுப்பையா |
| 2503 | துரைரட்ணம் இளமுருகன் |
| 2657 | கே. ரகுநாதன் |
| 2900 | வி. ரகுபதி |
| 3369 | கே. குலராஜசிங்கம் |
| 3753 | கே. கருமேகவண்ணன் |
| 3758 | கே எலிசபெத்கிரிசாந்தி |
| 4003 | எஸ். சாவித்திரிதேவி |
| 4118 | ஆர். ஜெயக்குமார் |
| 4188 | எஸ் நிர்மலாதேவி |
| 1024 | எஸ். பத்மராணி |
| 1137 | கே. ஜெயராஜன் |
| 1302 | ரி. புவனேந்திரன் |
| 1596 | கே. சிவகுமார் |
| 1777 | வி. பத்மநாதன் |
| 1817 | கே. வங்கேசன் |
| 2279 | ஆர். ராஜேஸ்வரன் |
| 2299 | ஆர். ராஜேஸ்கண்ணன் |
| 2300 | எம். துரைராஜா |
| 2429 | எம். ஜெயானந்தன் |
| 2603 | எஸ். மேகலாதேவி |
| 2793 | ஜே. தர்மலிங்கம் |
| 2918 | எஸ். யோகராஜன் |
| 2941 | என். ஜெயரஞ்சினி |
| 3023 | எஸ். மாலினி |
| 3261 | ஆர். தமிழ்மாறன் |
| 3556 | ஜே. ராஜநாயகம் |
| 3500 | எஸ். சபாநாதன் |
| 3655 | பி. ஜெயகரன் |
| 3659 | பி. கண்ணதாசன் |
| 4189 | எஸ். கலையரசி |

# பெண் உருவிலான ஹிட்லர்

# இன்றைய அர. தலைவர்கள் பதவி வகிக்க தகுதியற்றோர்

திரு உடுகம்பொல சர்ச்சைக்குரிய, அதேவேளை திறமைமிக்க குற்றவியல் தடுப்புப் பொலிஸ் அதிகாரியாகும். இந்நிலையில் திரு. பிரேமதாசாவின் மிக நெருங்கிய நம்பிக்கைக்குரிய சகாவாகக் கடந்த காலத்தில் செயலாற்றிய திரு. உடுகம்பொல திரு. பிரேமதாசாவின் உள்வீட்டு விவகாரங்கள் பலவற்றை அறிந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. திரு. பிரேமதாசா மீது குற்ற விசாரணை கோரியவர்கள் அரசியல் வாதிகளே ஒழிய அதிகாரிகள் அல்ல. அரசியல் வாதிகள் எப்பொழுதும்சம்பவங்களைகேள்வியுறுவதற்கானவாய்ப்புக்களே அதிகம். ஆனால், அதிகாரிகள் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவர்கள், அரசாங்கத்தைப் பாதுகாப்பவர்கள் இதன் காரணமாக அரசியல் வாதிகளை விட அதிகாரிகளுக்கு உள் வீட்டு இரகசியங்கள் பெருமளவில் தெரிய நியாயமுண்டு. இதனால் திரு. உடுகம்பொலவிடமும் பிரேமதாசா அரசாங்கம் பற்றிய பல தகவல்கள் இருந்தால் ஆச்சரியபபடுவதற்கில்லை.

திரு. உடுகம்பொல தாம் நினைத்தது போலவே, சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பிரச்சினைக்குள் இழுத்துவிட்டு தனது பிரச்சினையை அரசியல் மயமாக்கியதோடு, மேலும் தனது நிலையை அரசியல் ரீதியாக பலப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி பிரேமதாசா மீது குற்ற விசாரணைகோரும் பிரேரணையில் பிரதான குற்றச்சாட்டாக வைக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆயுதவிநியோகம் செய்ததான விவகாரத்தையும், அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் கொலை தொடர்பான விவகாரத்தையும் பெரிதுபடுத்தும் நடவடிக்கையில் தற்போது இறங்கியுள்ளார் இவ்விவகாரங்களில் அரசாங்கம் தன்னை விசாரணைசெய்ய அனுமதிக்கவில்லை என்பதன் மூலம் இவற்றிற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு இருந்ததாகக் குற்றம் சாட்டமுற்பட்டுள்ளார். இதனால், லலித் - காமினி குழுவினரின். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை தனது விடயத்துடன். இணைத்துவிட உடுகம்பொல செயற்படுவதாகத் தெரிகிறது

எது எவ்வாறாக இருப்பினும் திரு உடுகம்பொல தனது பிரச்சினையை ஓர் முக்கிய அரசியல் பிரச்சினையாக்கி விட்டார். இனி உடுகம் பொல கைது செய்யப்பட்டாலும் அது ஒரு அரசியல் குற்றச் சாட்டாகவும் அரசியல் பின்னணி கொண்டதாகவும் பார்க்கப்படப் போகிறது. இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ கூறியது போல் இப்பிரச்சினையால் பிரேமதாசா பதவி விலகுவதானால் இதுவரையில் விலகியிருப்பார். ஆனால் திரு. பிரேமதாசா பதவி விலகுவது சிரமமே'' 'ஜனநாயக' நாடுகளில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் குற்றச் சாட்டுக்களுக்காக பதவி விலகுவது என்பது ஒரு காலம் கடந்த செயல்முறை ஆகிவிட்டது. இந் நிலையில் இவ் அரசியல் நெருக்கடிகள் திரு. பிரேமதாசாவைக் கவிழ்த்து விடும் என்பது சந்தேகமே. சிலவேளை, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படினும் 'ஜனநாயகத்தைப்' பாதுகாக்க செய்யபபட்டவை என அரசு விளக்கம் அளிப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பெண் உருவிலான ஹிட்லர் ஜெயலலிதாமீது 'சுப்பு' சாடல்

(சென்னை)

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து வரும் பிளவுகள் மேலும் மோசமாகி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான ஒரு பிரிவும் கறுப்பையா மூப்பனார் தலைமையில் ஒரு பிரிவும் சேர்ந்து கொண்டு காங்கிரசிற்குள் தொடர்ந்தும் மோதிக் கொள்வதாகவும்,

அண்மையில் கறுப்பையா மூப்பனார் தலைமையிலான குழுவைச் சேர்ந்த சுப்பு எழுதிய கட்டுரை தொடர்பாகவே இந்த இரண்டு குழுக்களிடையே முன்பிருந்த மோதல் தீவிரமடைந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக வார சஞ்சிகை ஒன்றில் ஜெயலலிதாவை ''பெண் உருவிலான ஹிட்லர்'' என வர்ணித்து பதிவொன்றை சுப்பு எழுதியிருந்தார். இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார்.

''பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும்எனக்குஎதிராககட்டுரைகளை எழுதுபவர் தமிழ்நாடு காங்கிரஸ் பொறுப்பு வாய்ந்த பதவியில் இல்லை என்றாலும் கூட அவர் கட்சி உறுப்பினராகவே இருக்கிறார் அ.தி.மு.கவில் இருக்கும் எவராவது காங்கிரசுக்கு எதிராக அல்லது அதன் தலைவர்களுக்கு எதிராக இவ்வாறு எழுதியிருந்தால் அவரை கட்சியில் இருந்து உடனடியாகவே நான் வெளியேற்றியிருப்பேன் எனது பொறுமையை தயவு செய்து பலவீனமாகக் கருதாதீர்கள். எமது கட்சியிலும் இதே போன்ற காரசாரமான கட்டுரைகளை எழுதக்கூடியவர்கள்இருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் இதைக் கூறிய பின்னர் சட்டசபையில் காங்கிரஸ்காரர்களுக்கு இடையே ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் காங்கிரஸ் எந்தளவு மோசமாக பிளவுபட்டிருக்கிறது என்பதை காட்டியது.

ஜெயலலிதா குறித்து பத்திரிகையில் எழுதிய சுப்பு' வாழப்பாடி ராமமூர்த்தி தனக்குத் துரோகம் செய்து விட்டார் என்று சொல்லிக் கொண்டு மூப்பனார் அணியில் சேர்ந்து விட்டார்.

## மரகதம் சந்திரசேகரர் வாழப்பாடி தப்பமுடியாது

### வர்மா ஆணைக்குழு தெரிவிப்பு

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கேதுவான பாதுகாப்பு குறைபாடுகளுக்கான பொறுப்பில் இருநது வாழப்பாடி கே. இராமமூர்த்தி மற்றும் மரகதம் சந்திரசேகரர் போன்ற தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களோ மாநிலத்தின் உயர் பொலிஸ் அதிகாரிகளோ தப்பமுடியாது என வர்மா ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

முன்னாள் பிரதமருக்கு இருந்த உயிராபத்துகுறித்து இராமமூர்த்திக்கும் மரகதம் சந்திரசேகரருக்கும் நன்கு புரியும். அத்தோடு மரகதம் சந்திரசேகரர் ஒரு முன்னாள் மத்திய அமைச்சரும் கூட. எனவே இந்த அச்சுறுத்தல் குறித்து அவர்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும் என ஆணைக் குழுவின் தலைவரான நீதியரசர் ஜே. என். வர்மா தெரிவித்தார்.

ராஜீவ் கொலைவிவகாரத்தில் உள்ள பாதுகாப்புகுறைபாடுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்டதே இந்த ஆணைக்குழு என்பது தெரிந்ததே.

## இன்றைய அர. தலைவர்கள் பதவி வகிக்க தகுதியற்றோர் - மகிந்தா ராஜபக்ஷ

(காலி)

பிரேமதாஸா உடுகம்பொலவின் சத்தியப் பிரமாணம் செய்து உறுதியளிக்கப்பட்ட அறிக்கையின் படி அரசுத் தலைவர்கள் பதவியிலிருக்கத் தகுதியற்றவர்கள் அரசு தனது குற்றங்களைப் உடுகம்பொலவின் தலையில் சுமத்தப் பார்த்தது. மாறாக அரசு இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது என்று ஹம்பாந்தோட்ட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மனித உரிமைகளுக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவருமான மகிந்தாராஜபக்ஷ பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறல், சிறிலங்காவில் அதன் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

இது சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும். அவசர கால நிலை நீண்ட காலமாக அமுலில் உள்ளதால் நாட்டின் சாதாரண சட்டத்துக்கு மாறாகப் பொலிசும், பாதுகாப்புப் படைகளும் செயற்படுகின்றன இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு. என். பி. அரசு அரசியல் நோக்கங்களுக்காக அளவுக்கதிகமாக அதிகாரத்தைப் பாவித்தது ஆனால் அரசுத் தலைவர்கள் அரசியல் நோக்கங்களை வைத்து நற்சான்றிதழ் கேட்கிறார்கள். அவசரமாக பொலிஸ் அதிகாரிகளுக்குஅரசு பதவி உயர்வு வழங்கியதும், உடுகம்பொலவை கட்டாய விடுமுறையில் அனுப்பியதும் அரசின் நோக்கைக் காட்டுகிறது இவ்வாறு மகிந்தா ராஜபக்ஷவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே உடுகம்பொலவின் அறிக்கை குறித்து ஒரு நியாயமான விசாரணையை அரசிடம் எதிர்பார்க்க முடியாதென்றும் சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் நீதிக்கான சர்வதேசக் குழு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்றும் மனித உரிமைகள் குழுவின் சார்பில் மகிந்தா ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

## பௌத்த குருமாரின் குழு ஏப்ரல் 18இல் வர ஏற்பாடு

இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கென பௌத்த குருமாரின் தூதுக்குழு ஒன்று ஏப்ரல் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்த தூதுக்குழுவில் சிறி அமரபுர பீடாதிபதி சித்தாந்த தேரோ தலைமையில் 10 பௌத்தகுருமார் அங்கம் வகிப்பர் எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விமான மூலம் பலாலி விமானத்தளத்தை வந்தடைவார்கள் எனவும் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் செல்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'நக்கீரன்'க்கு தீ வைப்பு

(கோயம்புத்தூர்)

''நக்கீரன்' வாரப் பத்திரிகையின் ஒன்பதினாயிரத்திற்கும் அதிகமான பிரதிகள் எரிக்கப்பட்டுள்ளன அல்லது அ.தி.மு.க தொண்டர்களினால் கடந்த வியாழக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதாவை மாசுபடுத்தும் வகையிலான கட்டுரை ஒன்று இச்சஞ்சிகையில் பிரசுரிக்கபபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான அபிவிருத்திக் கருத்தரங்கு இம் மாதம் 25ஆம் திகதியில் நடைபெற மாட்டாது. இது அடுத்த மாதம் 2ஆம் திகதி காலை 9 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறும். இதனை யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (பா)

ஈழநாதம்

# கோழைகளே தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்துள்ளனர்

## தமிழகத்தில் துண்டுப்பிரசுரம்

(சென்னை)

கோழைகளே தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்துள்ளனர் என தமிழக அதிகாரிகளால் அகதி முகாம்களில் விநியோகிக்கப்படும் துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி சென்னை முகவர் சாம் இராஜப்பா எழுதியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களை எவ்வளவு விரைவில் திருப்பி அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவாகத் திருப்பியனுப்ப தமிழக அரசு முயல்கிறது. அகதிகள் எவரும் இலங்கைக்குத் திரும்புமாறு நிர்ப்பந்திக்கப்படவில்லை என அகதிகள் நலன்காக்கும் அதிகாரிகள் வலியுறுத்திவரும்வேளையில் அகதி முகாம்களில் நிலைமை வேறுவிதமாக இருக்கிறது.

அகதிகளை இலங்கைக்குத் திருப்பிச் செல்லும்படியும், அவர்கள் தமிழ்நாட்டில் தங்கியிருப்பதைத் தமிழ்நாடு விரும்பவில்லை எனவும் திருவண்ணாமலையின் கலெக்டர் அகதிகளுக்கு கூறிவருவதாகச்சொல்லப்படுகிறது. இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் நீங்கள் நாடு திரும்ப ஏற்பாடுசெய்துள்ளது ஆனால் நீங்கள் திரும்பிச்செல்ல மறுக்கிறீர்கள் இலங்கையில் உயிருக்குப் பாதுகாப்பில்லை எனக் கூறுகிறீர்கள். ஆனால் இலட்சக் கணக்கான மக்கள் அங்கு வாழ்கின்றனர். கோழைகள் தான் இங்கு அகதிகளாக வந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என அந்தச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டன் தேர்தல் முடிவுகள் மீண்டும்கன்சவேட்டிவ் ஆட்சி

(லண்டன்)

பிரிட்டனில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர் வேட்டிவ் கட்சி நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது.

651அங்கத்தவர்களைக் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்எல்லா முடிவுகளும வெளி வந்து விட்டன. கன்சவேட்டிவ் கட்சி 333இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தொழிற் கட்சிக்கு 271 இடங்களும் லிபரல் ஜனநாயக கட்சிக்கு 20 இடங்களும்கிடைத்துள்ளன. ஏனைய கட்சிகள் மொத்தம் 27 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

பிரதமர் ஜோன் மேஜர் 36000 அதிகப்படியான வாககுகளால் வெற்றி பெற்றுள்ளார். ஆனால் கன்சவேட்டிவ் கட்சித் தலைவர் கிறிஸ் பேகர் தோல்வியடைந்தார். தொழில் கட்சித் தலைவர் நீல் கெனத் லிபரல் ஜனநாயக கட்சித் தலைவர் பாடி ஆண்டம் ஆகியோர் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த தேர்தலில் 6 ஆசியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கன்சவேட்டிவ்கட்சி சார்பில் போட்டியிட்ட இலங்கையரான நிரஞ்சன் டீ சில்வா என்பவர் வெற்றி பெற்றுள்ளார்.

# காங்கிரஸ் மகாநாட்டிற்கு ஐ.தே.க. குழு செல்கிறது

ஆந்திர மாநிலத்தின் திருப்பதியில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தேசிய மாநாட்டில் பங்கேற்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தூதுக் குழுவொன்று இந்தியா செல்கிறது.

வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தலைமையில் செல்லவுள்ள இக்குழுவில் போல் பெரேரா மற்றும் கொழும்பு பிரதி மேயர் கே. கணேசலிங்கம் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

## யாழ். இந்து மகளிர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் வெளியான 91ஆம் ஆண்டு சாதாரண தரப்பரீட்சையில யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னணி மாணவிகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு செல்வி கஞ்சனா கோபாலகிருஷ்ணன் ஏழு விசேட சித்தி இவருக்கு சங்கீத பாட பெறுபேறு வரவில்லை ஆறு விசேட சித்திகளை பதினொரு பேரும் ஐந்து விசேட சித்திகளை பதினேழுபேரும் நான்கு விசேட சித்திகளை பதினெ…

## 150 பொலிசார்

ஊர்காவற்றுறையில் தற்போது இருக்கும் பொலிசாரின் எண்ணிக்கை நூற்றிஐம்பதாக உயர்த்தப்படும் எனவும் இவர்களில் ஐம்பது பேர் மட்டுமே தமிழர்களாக இருப்பார்கள் எனவும்; ஏனையோருக்கு தமிழ் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குருசிங்க தெரிவித்துள்ளார் என கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் மேலும் கூறுகையில் தீவுப் பகுதியில் சிவில் நிர்வாகத்தை மீளவும் ஏற்படுத்த பாதுகாப்பு படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், அவர்களுக்கு ஈ.பி. டி. பி. யினர் பெருமளவில்…

## இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொச்சிக்கடைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும்,

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர் ஏறாவூரைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தியாகதீபம் அன்னை பூபதி நினைவாக இன்று

(யாழ்ப்பாணம்)

★ தியாகி அன்னை பூபதி நினைவாக இன்று மணிப்புரிக் கிராம அபிவிருத்திச் சபை முன்றலில் உண்ணா விரதமும் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

கற்பகம் மணிப்புரி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினரால் நடாத்தவுள்ள இவ் உண்ணா விரத நினைவு காலை 7 00 மணி முதல்மாலை 4. 00 மணிவரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாகும். இதில் கடற்புலிகளின் பாவையூர்ப்பொறுப்பாளர்செழியன், கடற்புலிகளின்வலிகாமம்கிழக்குப் பிரிவுப்பொறுப்பாளர் சங்கீதன் கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் சுமதி மணிப்புரி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி திட்டப் பிரிவுப்பொறுப்பாளர் குலமதி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

★ வடமராட்சியில் உள்ள சனசமூக நிலையங்களின் சமாசங்கள் இன்று அன்னை பூபதி ஞாபகார்த்த உண்ணா விரதத்தையும் பொதுக் கூட்டங்களையும் நடாத்துகின்றன.

பருத்தித்துறைபிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசம் அதன் தலைவர் க. ஆறுமுகம் தலைமையில் தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்திலும் கரவெட்டி பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசம் அதன் தலைவர் க. வேலாயுதம் பிள்ளை தலைமையில் கரவெட்டி மூத்த விநாயகராலயத்திலும் உண்ணா விரதங்களையும் பொதுக் கூட்டங்களையும் நடாத்துகின்றன. இக் கூட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள்மகளிர் முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ வலி தென் மேற்குப் பகுதியிலுள்ள சகல சனசமூக நிலையங்களும், வலி தென் மேற்கு பிரதேசம் சனசமூக நிலையங்களின் சமாசம் ஆகியன கூட்டாகஇணைந்துஇன்று காலை 9 00 மணி முதல்மாலை 5 00 மணிவரை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் சமாசத் தலைவர் வை. செகராசசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜனனி செஞ்சோலை உண்ணா விரதத்தை ஆரம்பித்து வைப்பார்.

# விமான ஓடுபாதைகள் ஆராய இந்திய அதிகாரிகள்

விமான ஓடு பாதை பற்றி ஆராய இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் இன்று திருக்கோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளனர். இந்தியாவிலுள்ள அகதிகளை விமானம் மூலம்…

விமான நிலையத்தின் ஓடு பாதை நீளம் போதுமானதாக இல்லாமையினாலேயே திருக்கோணமலை விமான நிலையத்தின் ஓடு பாதை பற்றி ஆராயப்படுவதாகவும் அதற்…

## முத்தமிழ் விழா நிதி சேகரிப்பு

# குடாநாடு எங்கும் கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடத்தி வரும் கலை நிகழ்ச்சிகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் இடம் பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை சங்கானையிலும், புதன்கிழமையன்று ஏழாலை மகாவித்தியாலயத்திலும், வியாழக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் இரவு ஏழு மணியளவில் இக் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

சாந்தன் குழுவினரின் போர்க்கால ராகங்கள் இன்னிசை நிகழ்ச்சியும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் தயாரித்து வழங்கும் பொன். கணேசமூர்த்தியின் சந்தனக் காடு நாடகமும் இடம் பெறவுள்ளது.

அனைத்து தமிழீழ மக்களும் அன்பளிப்புச் சீட்டுக்களைப் பெற்று ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் முத்தமிழ் விழாப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஹாட்லியில் சிறந்த பெறுபேறுகள்

(பருத்தித்துறை)

க. பொ த சாதாரணதரப் பரீட்சைக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய செல்வன் தங்கராஜா திருமுருகன், செல்வன் இந்திரலிங்கம் தர்மேந்திரா ஆகிய இருவரும் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி (D)பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலிருந்து தோற்றிய ஏழு மாணவிகள் ஏழு பாடங்களி…

## மாபெரும் கலைவிழா

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் மாதாந்த கலை நிகழ்ச்சி தென்மராட்சிப் பிரிவில் இன்று சாவகச்சேரி நதலன் விளையாட்டு அரங்கில் நடைபெற இருக்கிறது இதில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாதந்தோறும் நடைபெறும் சனிக்கிழமைக் கருத்தரங்கு இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கு நிகழ்வில் ''கவிஞர் கல்வயல் குமாரசாமி அவர்கள் ''குழந்தைக் கவிதைகள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

## திருக்கோணமலையில்

# புல்லினால் பாடசாலை மாணவர் அவலம்

[திருக்கோணமலை]

திருக்கோணமலை மாவட்டம் கங்குவேலி என்னுமிடத்தில் இலுக்கைப் புல்லினால் அமைக்கப்பட்ட பாடசாலை ஒன்று இயங்கிவருகிறது இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் இந்தப் பாடசாலையில் படித்து வருகின்றனர்.

க பொ த சாதாரண தரம் வரையுள்ள இந்தப் பாடசாலையில் 10 தொண்டர் ஆசிரியர்கள் மட்டுமே கல்வி கற்பிக்கின்றனர்.

கிளிவெட்டிப் பகுதியிலுள்ள ஒரேயொரு பாடசாலையான இது 1990 இல் இராணுவத்தினரால் குண்டுவைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டது.

பாடசாலையை புனரமைப்பதில் சிறிலங்கா அரசு எதுவித அக்கறையும்காட்டாததினால் பெற்றோர்கள் இந்த பாடசாலையை புற்களைக் கொண்டு அமைத்துள்ளனர்.

தரையிலிருந்து கல்வி கற்கும் இந்தமாணவர்கள்தமக்கு தேவையான ஏனைய உபகரணங்களை ஒவ்வொரு நாளும் வீட்டிலிருந்து எடுத்து வர வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

# பத்திரிகையாளரைவிசாரிக்க சட்டசபையில் தீர்மானம்

(சென்னை)

பிரபல ஆங்கில வார சஞ்சிகையான இலஸ்ட்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியாவின் ஆசிரியர் அனந் சர்க்காரையும், அதில் முன்பு பணியாற்றிய பத்திரிகையாளர் வே. வி. சுணிலையும் சட்டப் பேரவைக்கு வரவழைத்துக் கூண்டில் ஏற்றி அதிருப்தியைத் தெரிவிப்பதென்று தமிழ்நாடு சட்டப் பேரவை முடிவு செய்துள்ளது.

இப்படிச் செய்ய வேண்டுமென்று சட்டப்பேரவை உரிமைக்குழு பரிந்துரைத்ததை நேற்றுப் பேரவை ஏற்றுக் கொண்டது…

இது வந்தபோது, சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியரும், கட்டுரையாளரும் அழைப்பை ஏற்று வரவில்லை என்று பரிந்துரையில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்தே சட்டப்பேரவை அவர்கள் இருவரையும் வரவழைப்பதென்று முடிவு செய்துள்ளது.

இதே போல், கோவை மாலை முரசுப் பத்திரிகை சபை நடவடிக்கையை திரித்துச் செய்தி வெளியிட்டதற்காக அந்தப் பத்திரிகை ஆசிரியரைப் பேரவைக்குவரவழைத்துக் கண்டிக்க வேண்டும் என்…

ரண தரப்பரீட்சையில யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னணி மாணவிகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு செல்வி காஞ்சனா கோபால கிருஷ்ணன் ஏழு விசேட சித்தி இவருக்கு சங்கீத பாட பெறுபேறு வரவில்லை ஆறு விசேட சித்திகளை பதினொரு பேரும் ஐந்து விசேட சித்திகளை பதினேழுபேரும் நான்கு விசேட சித்திகளை பதினெட்டுப் பேரும் பெற்றுக் கொண்டனர்.

வும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குரு சிங்க தெரிவித்துள்ளார் என கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

அவர் மேலும் கூறுகையில் தீவுப்பகுதியில் சிவில் நிர்வாகத்தை மீளவும் ஏற்படுத்த பாதுகாப்பு படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், அவர்களுக்கு ஈ.பி.டி.பி. யினர் பெருமளவில் உதவிவருவதாகவும் தெரிவித்துள்ளார்

# விமான ஓடுபாதைகள் ஆராய இந்திய அதிகாரிகள்

விமான ஓடு பாதை பற்றி ஆராய இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் இன்று திருக்கோண மலைக்கு விஜயம் செய்யவுள்ளனர் இந்தியாவிலுள்ள அகதிகளை விமானம் மூலம் அழைத்து வருவது பற்றி ஆராய்ந்து வருவது தெரிந்ததே வவுனியாவிலுள்ள விமான நிலையத்தின் ஓடு பாதை நீளம் போதுமானதாக இல்லாமையினாலேயே திருக்கோணமலை விமான நிலையத்தின் ஓடு பாதை பற்றி ஆராயப்படுவதாகவும் அதற்காகவே இந்திய தூதுவரக அதிகாரிகள் திருக்கோணமலை செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பரீட்சைக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய செல்வன் தங்கராஜா திருமுருகன், செல்வன் இந்திரலிங்கம் தர்மேந்திரா ஆகிய இருவரும் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி (D)பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலிருந்து தோற்றிய ஏழு மாணவிகள் ஏழு பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர் இம்மாணவிகளின் 8ஆவது பாடமான சித்திரம், நடனம் பாடங்களின் பெறுபேறுகள் கிடைக்கப் பெறவில்லை. (25)

ரியர் அனந் சர்க்காரையும், அதில் முன்பு பணியாற்றிய பத்திரிகையாளர்கே. வி. சுணிலையும் சட்டப் பேரவைக்கு வரவழைத்துக் கூண்டில் ஏற்றி அதிருப்தியைத் தெரிவிப்பதென்று தமிழ்நாடு சட்டப் பேரவை முடிவு செய்துள்ளது.

இப்படிச் செய்ய வேண்டுமென்று சட்டப்பேரவை உரிமைக்குழு பரிந்துரைத்ததை நேற்றுப் பேரவை ஏற்றுக் கொண்டது

இதற்கான தீர்மானம் ஒன்றை சபை முதல்வர் இரா. நெடுஞ்செழியன் முன்மொழிந்தார்.

சட்டப் பேரவையையும், பேரவைத் தலைவரையும் இழிவு படுத்தும் வகையில் கட்டுரை ஒன்று எழுதியதற்காக பத்திரிகை ஆசிரியர் மீதும், பத்திரிகையாளர் கே பி சுணில் மீதும் உரிமைப் பிரச்சினை பேரவையில் கொண்டு வரப்பட்டது. உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு

ஏற்று வரவில்லை என்று பரிந்துரையில் சுட்டிக்காட்டப் பட்டது. இதனையடுத்தே சட்டப்பேரவை அவர்கள் இருவரையும் வரவழைப்பதென்று முடிவு செய்துள்ளது.


இதே போல், கோவை மாலை முரசுப் பத்திரிகை சபை நடவடிக்கையை திரித்துச் செய்தி வெளியிட்டதற்காக அந்தப் பத்திரிகை ஆசிரியரைப் பேரவைக்குவரவழைத்துக் கண்டிக்க வேண்டும் என்றும் உரிமைக் குழு பரிந்துரை செய்துள்ளது இந்தப் பரிந்துரையும் நேற்றுப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. அந்தப் பத்திரிகை ஆசிரியர் கொடுத்த விளக்கம் திருப்தியானதல்ல என்றும் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

தவறான செய்தி கொடுத்த இந்தப் பத்திரிகையின் செய்தியாளர் பேரவையில் செய்தி சேகரிப்பதைப் பத்து வேலை நாள்களுக்கு அனுமதிக்கக் கூடாது என்றும் குழு பரிந்துரைத்துள்ளது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்ற

05 - 01 - 1924



மறைவு:

12 - 03 - 1992

### அமரர் பெரியதம்பி சபாரத்தினம்

12-03-92 அன்று எம்மைப் பிரிந்து சென்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (11-04-92) இன்று காலை 7-00 மணிக்கு வில்லூண்டியில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் பகல் 12-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு வேண்டுவதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

8/7, சீனிவாசகம் லேன்
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(2446)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்

## நினைவஞ்சலி

### கப்டன் கண்ணன்

(தர்மலிங்கம் அம்பிகைபாலன்)



வீர ஜனனம்
23.03.1969

வீரச்சாவு
04.04.1992

கட்டுவனில் 4-4-92 காவலரண் தகர்ப்பின் போது வீரச்சமரிட்டு வீரச்சாவடைந்தார்

எத்தனை இரவுபகல் கண்விழித்தோம்;
காத்திருந்தோம்
அத்தனை நாளிலும் விடுதலையின்
கனவு கண்டோம்
சத்திய வேள்விக்காய் சாவதற்கும்
துணிந்து நின்றோம்
நித்தியமும் நெஞ்சுருகி நெருப்போடும்
போரிட்டோம்

இப்படியே வாழ்ந்தோம் இம்மண்ணின்
விடிவிற்கெனவே
அப்படியே கட்டுவனில் அடிபட்டு
சமரிட்டு
விடுதலைக் கெனவே வீழ்ந்தாய்
வீரனே மண்ணில்
நெடுகலும் உன் நினைவு நெஞ்செல்லாம் வாழும்

(2445)

நண்பர்கள்

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கைதடியில் நேற்று 12 மணியளவில் கந்தையா ஜெயசித்திரா என்ற 11 வயது நிறைந்த பெண்பிள்ளையைக் காணவில்லை. இப் பெண்பிள்ளை தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் மிருசுவில் விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

## கொடுப்பனவு

யாழ்மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டிராத பகுதிகளுக்கான நான்காயிரம் ரூபா சுயதொழில் உற்பத்திக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான நிதியினை மதிப்பிட்டு சமர்ப்பிக்கும் படி யாழ் அரசஅதிபரை இதற்குபொறுப்பானஅமைச்சு கோரி உள்ளது. (பா)

## ‘அத்த’

டமா அதிபர் திணைக்களம் மேற் கொண்ட இந் நடவடிக்கையில் ‘அத்த’ பத்திரிகை ஆசிரியருக்கு எதிராகவும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவுக்கு எதிராகவும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவசர காலச் சட்டத்தின் கீழ் இக் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

## கடந்த

மோட்டார் சைக்கில்களும், 7 லொறிகளும், நான்கு மினி பஸ்களும், நான்கு ஆட்டோக்களும், மூன்று வான்களும், மூன்று உழவியந்திரங்களுமே சம்பந்தப்பட்டுள்ளன எனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் பார்வதிப்பிள்ளை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சிவகுருவீதி, கொக்குவில் மேற்கில் வசித்தவரும் ஆகிய நமசிவாயம் பார்வதிப்பிள்ளை 10-4-92-ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நா. நமசிவாயத்தின் (முன்னாள் தபால் ஊழியர் வேலணை) அன்பு மனைவியும் திருமதி புனிதவதி பசுபதிப்பிள்ளை காலஞ்சென்ற கைலாசபதி (முன்னாள் தபால் ஊழியர் வேலணை), மலர்மகள் திருஞானசம்பந்தர் செவ்வந்திநாதன் (முன்னாள் மின்சாரசபை கணக்குப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. ஏ. பசுபதிப்பிள்ளை, திரு. இ. திருஞானசம்பந்தர் திருமதி பகவதி, திருமதி சாந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 11-4-92-ல் நண்பகல் 11 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுருவீதி,
(ஐயனார் கோவிலடி),
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(சி/2449)

ஏ. பசுபதிப்பிள்ளை
ந. பூபாலபிள்ளை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.